வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect
Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**Press release No :38** **Date :23.02.2026**

**Hon'ble Minister Sarbananda Sonowal Presides Over Inauguration and Foundation-Laying of Projects Worth Over ₹1,500 Crore at VOC Port**

The Hon'ble Union Minister of Ports, Shipping & Waterways, Shri Sarbananda Sonowal, today presided over a landmark inauguration and foundation-laying ceremony at V.O. Chidambaranar Port Authority (VOC Port), Tuticorin. The event marked the implementation of transformative projects valued at over ₹1,500 crore, reflecting the Government of India's sustained emphasis on port-led development under the visionary leadership of Hon'ble Prime Minister Shri Narendra Modi. It also underscored VOC Port's swift rise as a green, digitally advanced, and capacity-driven maritime hub.

A key highlight of the occasion was the inauguration of the VOC Maritime Heritage Museum — a contemporary, immersive institution dedicated to preserving India's rich maritime legacy and honouring the enduring contribution of freedom fighter V.O. Chidambaranar. A national icon not only for Tamil Nadu but for the entire country, his maritime vision and legacy continue to inspire generations. Conceived not merely as a port initiative but as a tribute to the wider Coromandel Coast, the museum is set to emerge as a significant cultural and educational landmark for southern Tamil Nadu. It will deepen public awareness of India's maritime history, promote tourism, and strengthen community engagement across the region.

The Minister inaugurated and laid foundation stones for a broad array of initiatives encompassing upgraded rail and road connectivity, enhanced power infrastructure, renewable energy integration (including solar, wind, battery storage, and green hydrogen production), advanced safety systems, and cutting-edge digital platforms. These projects will markedly improve cargo evacuation efficiency, shorten vessel turnaround times, strengthen multimodal logistics, and elevate operational safety.

The ceremony built upon recent milestones, including the commissioning of three new berths over the past eighteen months—most notably North Cargo Berth-III, dedicated by the Prime Minister in July 2025—which has significantly boosted bulk cargo capacity. Steady progress continues on the Outer Harbour project, poised to enable handling of larger vessels and greater trade volumes.

VOC Port has emerged as a national pioneer in sustainable maritime operations, becoming the first Indian port to produce and utilise green hydrogen on-site. With the pilot operational since late 2025 and commercial-scale development advancing towards 2029, the port is firmly established as the country's Green Hydrogen Hub. Integrated renewable initiatives, green methanol facilities, and partnerships in e-ammonia and

CCUS position it as a future-ready green fuel bunkering centre, aligning with India's net-zero goals and Maritime Vision 2047.

On the technology front, VOC Port leads with India's first comprehensive Digital Twin platform, delivering real-time monitoring, AI-assisted analytics, predictive maintenance, and data-driven optimisation. An advanced Anti-Drone System further bolsters security of critical infrastructure. The port recently reinforced its digital leadership by hosting a high-level pre event on AI in ports on 9 February 2026 in Tuticorin and presenting the landmark session "AI-Powered Ports: Reimagining Efficiency and Operations" at the IndiaAI Impact Summit on 17 February 2026.

Strong operational results underpin these advancements. From April 2025 to January 2026, cargo handling increased 6% to 35.97 million tonnes, including a record 4 million tonnes in January alone. Container volumes rose 9.40% to over 7.16 lakh TEUs, driven by process reforms, additional equipment, expanded storage, and active industry participation.

This marked the Minister's fourth visit to VOC Port in the past two years, demonstrating continued high-level support for its accelerated growth.

The projects launched today will extend benefits far beyond the port, lowering logistics costs for trade, spurring industrial expansion—including shipbuilding and manufacturing—in Tuticorin, Tirunelveli, and Madurai districts, attracting investment, creating employment, and stimulating sectors such as renewable energy, logistics, and tourism. The Maritime Heritage Museum will further enrich the socio-economic fabric of southern Tamil Nadu.

With sustained focus on infrastructure, sustainability, digital innovation, and port-led industrialisation including shipbuilding, V.O. Chidambaranar Port is consolidating its status as a premier maritime gateway on India's eastern seaboard and a national model for green, secure, and intelligent port development.

Hon'ble Minister Shri Sarbananda Sonowal stated: "These landmark projects reflect the visionary leadership of Hon'ble Prime Minister Shri Narendra Modi and our collective resolve to build a self-reliant, green and technologically advanced maritime sector. Under his guidance, India's ports are being transformed into engines of growth and innovation

V.O.C. Port is undertaking transformative initiatives — from shipbuilding and the Outer Harbour Project to wide-ranging green measures — that will redefine the economic landscape of the entire region. These efforts will strengthen its position as a major transhipment hub, enabling it to compete with and, in time, surpass Colombo and other leading regional ports

Together, these initiatives will drive inclusive economic growth, promote environmental sustainability, foster shipbuilding and allied industries, and firmly establish India as a global maritime powerhouse."

Susanta Kumar Purohit, Chairperson, VOC Port Authority, added: "By prioritising world class infrastructure, cutting-edge digitisation, ambitious green innovation, and

port-led industrialisation including shipbuilding, VOC Port is strengthening its pivotal role in regional prosperity and national development.”

The above details were furnished in a Press Release by V.O. Chidambaranar Port Authority today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**Press Release No: 38** **Date: 23.02.2026**

**மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சர்பானந்தா சோனோவால் அவர்கள், வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் ரூபாய் 1,500 கோடி மதிப்பிலான திட்டங்களின் திறப்பு விழா மற்றும் அடிக்கல் நாட்டுதல்**

திரு. சர்பானந்தா சோனோவால், மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து துறை அமைச்சர், அவர்கள் இன்று வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையத்தில் நடைபெற்ற முக்கியமான துவக்க விழா மற்றும் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். 1,500 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்கள் இந்நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்நிகழ்வு, இந்திய அரசு வலியுறுத்தும் துறைமுகம் சார்ந்த வளர்ச்சியையும், மாண்புமிகு பாரத பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் தொலைநோக்கு தலைமையையும் பிரதிபலிக்கிறது. இது வ.உ.சி.துறைமுகம் பசுமை, மின்னணு முன்னேற்றம் மற்றும் திறன் மையப்படுத்தப்பட்ட கடல்சார் வர்த்தக மையமாக வேகமாக உயர்ந்து வருவதை சுட்டி காட்டுகிறது.

இந்த விழாவின் முக்கிய அம்சமாக, ‘‘வ.உ.சிதம்பரனார் கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம்’’ துவங்கப்பட்டது. இந்தியாவின் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் கடல்சார் பாரம்பரியத்தையும், இந்தியாவின் வளமான கடல் வரலாற்றையும் கௌரவிக்கும் வகையில் இந்த அருங்காட்சியகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல் முழு நாட்டிற்குமான தேசிய முன்னுதாரணமாக விளங்கும் வ.உ.சிதம்பரனார் அவர்களது கடல்சார் தொலைநோக்கும், பாரம்பரியச் சுவடுகளும் தலைமுறைகளைத் தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றன. இது துறைமுக முயற்சியாக மட்டுமல்லாமல், தென்கிழக்குக் கடற்கரைப் பகுதியின் பெருமையை எடுத்துரைக்கும் கலாச்சார மற்றும் கல்வி மையமாகவும் உருவெடுக்க உள்ளது. இது இந்தியாவின் கடல்சார் வரலாற்றைப் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சுற்றுலாவை மேம்படுத்தி, பிராந்தியமெங்கும் சமூக பங்கேற்புக்கும் பெரும் ஊக்கமளிக்கும்.

மேலும், மேம்பட்ட ரயில் மற்றும் சாலை இணைப்புகள், மின்சார உட்கட்டமைப்பு விரிவாக்கம், சூரிய மற்றும் காற்று மின்னாலை, மின்னுட்டும் ஆற்றல் சேமிப்பு மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஒருங்கிணைப்பு, மேம்பட்ட பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் நவீன மின்னணு தளங்கள் உள்ளிட்ட பல திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டங்கள் சரக்கு வெளியேற்ற திறனை அதிகரித்து, கப்பல்கள் துறைமுகத்திற்குள் வந்து திரும்பும் நேரத்தை குறைத்து, பல்முக போக்குவரத்து இணைப்புகளை வலுப்படுத்தும்.

கடந்த 18 மாதங்களில் மூன்று புதிய கப்பல் தளங்கள் துவங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, 2025 ஜீலை மாதத்தில் பாதர பிரதமர் அவர்கள் அர்ப்பணித்த வடக்கு சரக்கு தளம்-III துறைமுகத்தின் மொத்த சரக்கு கையாள்திறனை உயர்த்தியுள்ளது. மேலும், பெரிய கப்பல்களை கையாளும் மற்றும் திறனை அதிகரிக்கும். வெளித்துறைமுக திட்டமும் முன்னேற்றத்தில் உள்ளது. மேலும், வெளித் துறைமுகத் திட்டத்தில் தொடரும் இந்த நிலையான முன்னேற்றம், பெரிய கப்பல்களை கையாளவும், வர்த்தக அளவை பெருக்கவும் வாய்ப்பாக அமையும்.

வ.உ.சி துறைமுகம் பசுமை கடல்சார் செயல்பாடுகளில் தேசிய முன்னோடியாக திகழ்கிறது. தனது வளாகத்திலேயே பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்து பயன்படுத்தும் இந்தியாவின் முதல் துறைமுகமாக விளங்குகிறது. 2025-ன் இறுதியில் பைலட் திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. 2029-ஆம் ஆண்டுக்குள் வணிக அளவிலான உற்பத்தி நோக்கி முன்னேறுகிறது. ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முயற்சிகள், பசுமை மெத்தனால் வசதிகள், இ-அம்மோனியா மற்றும் கார்பன் பிடிப்பு (Carbon Capture, Utilization, and Storage - CCUS) கூட்டு முயற்சிகள், துறைமுகத்தை எதிர்காலத்திற்கு தயாரான பசுமை எரிபொருள் மையமாக மாற்றுகின்றன. இது இந்தியாவின் புஜ்ஜிய உமிழ்வு இலக்குகள் மற்றும் 'Maritime Vision 2047' திட்டத்துடனும் ஒத்திசைகிறது.

தொழில்நுட்பத் துறையில், வ.உ.சி. துறைமுகம் இந்தியாவின் முதல் முழுமையான 'துறைமுக மெய்நிகர் மாதிரி செயலி' (Digital Twin) மேடையை முன்னெடுத்து செயல்படுத்தியுள்ளது, இது நேரடி கண்காணிப்பு, செயற்கை நுண்ணறிவு உதவியுடன் பகுப்பாய்வு, முன்னறிவிப்பு பராமரிப்பு மற்றும் தரவுக்கேந்திய திறன் மேம்பாட்டை வழங்குகிறது. மேம்பட்ட ட்ரோன் எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்பும் துறைமுக கட்டமைப்புகளின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துகிறது.

சமீபத்தில், துறைமுகம் தனது மின்னணு முன்னணியை வலுப்படுத்தும் விதமாக, 2026 பிப்ரவரி 9 அன்று துறைமுகங்களில் செயற்கை நுண்ணறிவு பற்றிய உயர்நிலை முன் நிகழ்வை தூத்துக்குடியில் ஏற்பாடு செய்தது. மேலும் 2026 பிப்ரவரி 17 அன்று IndiaAI Impact Summit- நிகழ்வில் "AI in Ports and Maritime Operations: Practice, Policy and Future" என்ற முக்கிய அமர்வை நடத்தியது.

இந்த முன்னேற்றங்களுக்கு திடமான செயல்பாட்டு முடிவுகள் ஆதாரமாக உள்ளன. ஏப்ரல் 2025 முதல் ஜனவரி 2026 வரை, சரக்கு கையாளுதலில் 6 % சதவீதம் அதிகரித்து 35.97 மில்லியன் டன் கையாளப்பட்டது, அதில் ஜனவரியில் மட்டும் 4 மில்லியன் டன் சரக்கை கையாண்டு சாதனை பதித்துள்ளது. செயல்முறை சீர்திருத்தங்கள், கூடுதல் உபகரணங்கள், விரிவான சேமிப்பு வசதிகள் மற்றும் தொழிற்துறை செயல்பாட்டின் உயிர்ப்பூட்டல் மூலம், சரக்குப் பெட்டகங்களின் அளவு 9.40 % உயர்ந்து 7.16 TEUs இலட்சம் சரக்குபெட்டகங்கள் அளவை தாண்டியது.

இது, கடந்த இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு மத்திய அமைச்சர் வ.உ.சி. துறைமுகத்திற்கு வந்த நான்காவது பயணம் ஆகும், அதன் வேகமான வளர்ச்சிக்கு தொடர்ந்த ஆதரவை வெளிப்படுத்துகிறது.

இன்று தொடங்கப்பட்டுள்ள திட்டங்கள் துறைமுகத்தைக் கடந்தும் பல நன்மைகளை வழங்கும். வர்த்தகத்திற்கு தொடர்புடைய லாஜிஸ்டிக்ஸ் செலவுகளை குறைத்து, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களில் கப்பல் தயாரிப்பு மற்றும் உற்பத்தி உட்பட தொழிற்சாலை விரிவை ஊக்குவித்து, முதலீட்டைக் கவர்ந்து, வேலைவாய்ப்பை உருவாக்கி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, லாஜிஸ்டிக்ஸ் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளை ஊக்குவிக்கின்றன. இன்று அமைச்சரால் தொடங்கப்பட்ட வ.உ.சிதம்பரனார் கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம் தென் தமிழ்நாட்டின் சமூகபொருளாதார அமைப்பை மேலும் வலுப்படுத்தும்.

உட்கட்டமைப்பு மேம்பாடு, நிலைத்தன்மை, மின்னணு புதுமை மற்றும் கப்பல் தயாரிப்பு உட்பட துறைமுகம் மையப்படுத்திய தொழிற்துறைக் கட்டமைப்பில் தொடர்ச்சியான கவனம் செலுத்துவதன் மூலம், வ.உ.சி.துறைமுகம் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப்பகுதியில் முன்னணி கடல்சார் நுழைவாயிலாகவும், பசுமை, பாதுகாப்பு மற்றும் புத்திசாலித்தன்மை அடிப்படையிலான துறைமுக வளர்ச்சிக்கான தேசிய மாதிரியாகவும் தன்னை நிலைநிறுத்தி வருகிறது.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு சர்பானந்தா சோனோவால் அவர்கள் கூறும் போது, இந்த முக்கியத் திட்டங்கள், மாண்புமிகு பாரத பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் தொலைநோக்கு தலைமையையும், தன்னிறைவு, பசுமை மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் பெற்ற கடல்சார் துறையை உருவாக்கும் அரசின் கூட்டு உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கின்றன என்றும், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், இந்தியாவின் துறைமுகங்கள் வளர்ச்சியையும் புதுமையையும் ஊக்குவிக்கும் இயந்திரங்களாக மாற்றப்படுகின்றன என்றும் கூறினார்.

மேலும், வ.உ.சி. துறைமுகம் கப்பல் தயாரிப்பு மற்றும் வெளித்துறைமுகத் திட்டம் முதல் பசுமை நடவடிக்கைகள் வரை, முழு பிராந்தியத்தின் பொருளாதார நிலைமையை மறு உருவாக்கும் மாற்றத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது என்றும் இந்த முயற்சிகள் அதை முக்கியமான பரிமாற்ற மையமாக வலுப்படுத்தி, கொழும்பு மற்றும் பிற முன்னணி பிராந்திய துறைமுகங்களுடன் போட்டியிடவும், காலப்போக்கில் அதனை மீறவும் உதவும் என்றும் கூறினார்.

வ.உ.சி.துறைமுகத்தின் தலைவர் திரு.சுசாந்த குமார் புரோஹித, இ.ர.ப.மி.பொ அவர்கள் தனது செய்தியில், உலகத் தரமான கட்டமைப்பு, முன்னணி நவீன மேம்பாடு, மகத்தான பசுமை முயற்சி, மற்றும் கப்பல் தயாரிப்பை உட்படுத்திய துறைமுகம் சார்ந்த தொழிற்துறை வளர்ச்சிக்கு துறைமுகம் முன்னுரிமை கொடுப்பதை முன்னிட்டு, வ.உ.சி. துறைமுகம் பிராந்தியச் செல்வாக்கிலும் தேசிய வளர்ச்சியிலும் முக்கியப் பாத்திரமாக தன்னை வலுப்படுத்தி வருகிறது என்று உரைத்தார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி